தகவல் அறிக்கை

# உங்கள் பிள்ளை பிரச்சனைக்குரிய மற்றும்/அல்லது தீங்கு விளைவிக்கும் பாலியல் ரீதியான நடத்தைகளைக் வெளிப்படுத்தும் போது, அவர்களை எவ்வாறு ஆதரிப்பது

## பிரச்சனைக்குரிய மற்றும்/அல்லது தீங்கு விளைவிக்கும் பாலியல் நடத்தைகள் என்றால் என்ன?
## What are problematic and/or harmful sexualised behaviours (PHSB)?

பிரச்சனைக்குரிய மற்றும்/அல்லது தீங்கு விளைவிக்கும் பாலியல் ரீதியான நடத்தைகள் என்பது ஒரு பிள்ளை அல்லது இளம் நபரின் வளர்ச்சி நிலைக்கு எதிர்பார்க்கப்படும் வரம்பிற்கு வெளியே உள்ள பாலியல் ரீதியான நடத்தைகளை விவரிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். இந்த நடத்தைகள் பிள்ளைக்கும் அல்லது மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கலாம். உங்கள் பிள்ளை PHSB-ஐக் வெளிப்படுத்தியதால் இந்தத் தகவல் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### பாடசாலையுடனான தொடர்பு உங்கள் பிள்ளைக்கான ஆதரவுதவி வழங்க உதவுகிறது

பிள்ளைகளின் பெற்றோர்களுக்கும், பராமரிப்பவர்களுக்கும், பாடசாலைக்கும் இடையேயான தொடர்பு அவசியம்.

உங்கள் பிள்ளை மற்றும் உங்களின் குடும்பத்தை ஆதரிக்க என்னென்ன ஆதரவுதவிகள் மற்றும் சேவைகள் உதவியாக இருக்கும் என்பதைப் பாருங்கள். அனைவரும் பாதுகாப்பாக இருக்க திட்டங்களை உருவாக்க பாடசாலை ஊழியர்களுடன் இணைந்து பணியாற்றுங்கள்.

### தொலைபேசி உரைப்பெயர்ப்பாளர் சேவை

உங்கள் பாடசாலையுடன் பேசுவதற்கு உரைப்பெயர்ப்பாளர் உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து 131 450 என்ற தொலைபேசி இலக்கத்தில் உரைப்பெயர்ப்பாளர் சேவையை அழைத்து உங்கள் மொழியில் ஒரு உரைப்பெயர்ப்பாளரை இணைக்கும்படி கேளுங்கள். நீங்கள் அழைக்க விரும்பும் தொலைபேசி எண்ணை தொலைபேசி இயக்குனரிடம் கூறுங்கள், உரையாடலில் உங்களுக்கு உதவ தொலைபேசி இயக்குனர் ஒரு உரைப்பெயர்ப்பாளரை இணைப்பில் இணைப்பார். இந்த சேவைக்கு உங்களிடம் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது.

### நீங்கள் எப்படி உணரக்கூடும்?

இந்த சூழ்நிலைகள் வேதனையளிக்கலாம். ஒரு பெற்றோராகவோ அல்லது பராமரிப்பாளராகவோ, உங்கள் பிள்ளையின் நடத்தை பிரச்சனைக்குரியதாகவோ அல்லது தீங்கு விளைவிப்பதாகவோ இருப்பதை நீங்கள் அறியும்போது குழப்பமாகவும் பரவசமாகவும் உணரலாம். அதிர்ச்சி, சோகம், அவநம்பிக்கை, பதட்டம் மற்றும் கோபம் உள்ளிட்ட பல்வேறு எதிர்வினைகளை நீங்கள் அனுபவிக்கலாம். உங்கள் பிள்ளைக்கு ஆதரவுதவி அளிக்கும் போது அமைதியாக இருப்பது முக்கியம்.

### உங்கள் பிள்ளையிடம் பலவிதமான உணர்வுகள் காணப்படலாம்

- அவர்கள் சங்கடமாகவோ, வெட்கமாகவோ, குழப்பமாகவோ, சோகமாகவோ, குற்ற உணர்ச்சியாகவோ அல்லது கோபமாகவோ உணரலாம்.
- அவர்கள் துயரத்தைக் காட்டலாம் அல்லது உணர்ச்சியே இல்லாமல் இருக்கலாம்.
- அவர்கள் நடத்தையை ஒப்புக்கொள்ள மறுக்கலாம்.
- அவர்களின் நடத்தை பொருத்தமற்றது அல்லது தீங்கு விளைவித்தது என்பதை அவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.
- நடந்ததற்கு அவர்கள் மற்றவர்களைக் குறைத்து மதிப்பிடலாம் அல்லது குறை கூறலாம்.
- நடந்ததற்கு அவர்கள் மற்றவர்களைக் குறைத்து மதிப்பிடலாம் அல்லது குறைக் கூறலாம்.

### குறிப்பிட்ட ஆதரவுதவி சேவைகள்

Safe Wayz – பிரச்சனைக்குரிய அல்லது தீங்கு விளைவிக்கும் பாலியல் நடத்தைகளைக் காட்டிய பத்து வயதுக்குட்பட்ட பிள்ளைகள், அவர்களின் குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் உட்பட அனைவருக்கும் ஆதரவுதவி அளிக்கும் ஒரு திட்டம்.

New Street Services - தீங்கு விளைவிக்கும் பாலியல் நடத்தைகளைக் வெளிப்படுத்திய 10 முதல் 17 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு சிகிச்சை சேவைகளை வழங்கும் ஒரு திட்டம். தீங்கு விளைவிக்கும் பாலியல் ரீதியான நடத்தையைப் புரிந்துகொள்ளவும், ஒப்புக்கொள்ளவும், பொறுப்பேற்கவும், நிறுத்தவும் உதவுவதற்காக New Street Services இளைஞருடன் இணைந்து செயல்படுகிறது.

இரண்டு சேவைகளும் NSW Health இணையத்தளத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.



NSW GOVERNMENT

# உங்கள் பிள்ளை/இளைஞரை நீங்கள் எவ்வாறு ஆதரிக்க முடியும்

## நான் உங்களுக்காக இங்கே இருக்கிறேன் மற்றும் உங்களுக்கு ஆதரவுதவி அளிக்கிறேன்

- உங்கள் பிள்ளைக்கு ஆதரவுதவியளிக்க நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- அவர்கள் தங்கள் சொந்த வார்த்தைகளிலும், அவர்களின் சொந்த நேரத்திலும் தங்கள் கதையைச் சொல்லட்டும்.
- அவர்களின் உணர்வுகளையும் கவலைகளையும் புரிந்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் பிள்ளை மற்றும் குடும்பத்தினருடன் நேர்மறையான விடயங்களைச் செய்து நேரத்தைச் செலவிடுங்கள்.
- பாடசாலை மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் போன்ற வழக்கமான செயல்பாடுகள் மற்றும் வழக்கங்களைப் பராமரிக்க ஆதரவுதவி வழங்குங்கள்.
- மாற்றுத்திறன் பிள்ளைகள் அவர்களின் உணர்வுகளை பகிர்ந்துக் கொள்ள கூடுதல் கவனிப்பு, பொறுமை மற்றும் ஆதரவுதவி தேவைப்படலாம்.

## நீங்கள் பாதுகாப்பாக உணர நான் உதவ விரும்புகிறேன்

- உங்கள் பிள்ளையுடன் அவர்களின் நடத்தை பற்றி அமைதியாகப் பேசுங்கள், அவர்களின் நடத்தை ஏன் சரியில்லை என்பதையும் அதை ஏன் நிறுத்த வேண்டும் என்பதையும் விளக்குங்கள்.
- பாலியல் மற்றும் ஆரோக்கியமான நட்புகள் பற்றிய உண்மைகள் மற்றும் தகவல்களை வயதுக்கு ஏற்றவாறு வழங்கவும்.
- அடுத்து என்ன நடக்கக்கூடும் என்பது பற்றிய துல்லியமான தகவல்களைப் பெறுங்கள், இதன் மூலம் உங்கள் பிள்ளைக்கு என்ன ஆதரவுதவி தேவைப்படலாம் என்பதைப் பற்றி நீங்கள் கலந்துரையாட முடியும்.

## நீங்கள் மட்டும் தனியாக இல்லை

- உங்கள் பிள்ளைக்கு ஆதரவுதவி வழங்கும் திட்டங்களை உருவாக்க பாடசாலையுடன் இணைந்து பணியாற்றுங்கள்.
- குடும்பத்தினர் மற்றும் நண்பர்களின் ஆதரவுதவியைப் பெறுங்கள்.
- என்ன நடந்தது என்பதில் உங்களுக்கு ஆதரவுதவி அளித்து, உங்கள் பிள்ளை மற்றும் குடும்பத்திற்கு சிறந்த பாதையைக் கண்டறிய உதவும் நிபுணர்களிடமிருந்து ஆதரவுதவி மற்றும் ஆலோசனையைப் பெறுங்கள்.

## உங்களை கவனித்துக் கொள்ளுங்கள்

- உங்கள் சொந்த எதிர்வினைகள் மற்றும் நீங்கள் எவ்வாறு சமாளிக்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.
- உங்களை நீங்களே கவனித்துக் கொள்ளுங்கள், அப்போதுதான் உங்கள் குடும்பத்தை நீங்கள் கவனித்துக் கொள்ள முடியும்.
- மகிழ்ச்சிகரமான விடயங்களை செய்யுங்கள் அது உங்கள் மன அழுத்தத்தை நிர்வகிக்க உதவும்.

## பொது ஆதரவுதவி சேவைகள்

| | | |
|---|---|---|
| **Kids Helpline**<br>1800 55 1800 | **1800RESPECT**<br>1800 737 732 | **13YARN**<br>13 92 76 |
| **Parent Line**<br>1300 130 052 | **Lifeline**<br>13 11 14 | **Q Life**<br>1800 184 527 |

*இந்தத் தகவலைப் படிக்கும்போது கவனமாக இருங்கள், ஏனெனில் இதில் சோகமாகவோ, தொந்தரவாகவோ அல்லது மன உளைச்சலை ஏற்படுத்துவதாகவோ நீங்கள் காணக்கூடிய உள்ளடக்கம் இருக்கலாம்.*